தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் – 641 003

முனைவர்.ஏ.சோமசுந்தரம், பி.எச்.டி,
மக்கள் தொடர்பு அலுவலர்
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி:0422 – 6611302
நிகரி : 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி : 26.03.2013

ஐயா,

கீழே குறிப்பிட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

ஏப்ரல், மே மாதங்களில் உளுந்து மற்றும் பாசிப்பயறின் விலைகள் நிலையாக இருக்கும்

உலகளவில் இந்தியா பயறுவகைகளில் மிகப்பெரிய உற்பத்தியாளராகவும், நுகர்வோராகவும் உள்ளது. முக்கிய பயறுவகைகளான உளுந்தும், பாசிப்பயறும் இந்திய வேளாண்மையில் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. 2011 – 12 ல் நான்காம் முன்கணக்கீட்டின் படி இந்தியாவில் உளுந்து உற்பத்தி 1.83 மில்லியன் டன்னாகவும் பாசிப்பயறு உற்பத்தி 1.81 மில்லியன் டன்னாகவும் இருந்தது. இந்தியாவில் உளுந்து உற்பத்தி செய்யும் மாநிலங்கள் மகாராஷ்டிரா, ஆந்திரபிரதேசம், உத்திரபிரதேசம் தமிழ்நாடு ஆகியன ஆகும். தமிழ்நாட்டில் இதன் உற்பத்தி கடந்த வருடம் 98712 டன்னாகும். ராஜஸ்தான், மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம், கர்நாடகா, ஒடிசா மற்றும் தமிழ்நாடு ஆகியன பாசிப்பயறு உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்கள் ஆகும். தமிழ்நாட்டில் இதன் உற்பத்தி 47673 டன்னாகும்.

விலை ஏறுவதற்கும் குறைவதற்கும் முக்கிய காரணங்கள் உற்பத்தி, தேவை மற்றும் அரசாங்க கொள்கைகள் ஆகியன ஆகும். நுகர்வோர் நலன் உணவு மற்றும் பொது விநியோக

அமைச்சகத்தின் படி, இந்தியா இந்நிதியாண்டில் (2012-13), 2.75-2.80 மில்லியன் டன் பயறுவகைகளை இறக்குமதி செய்யும் எனத் தெரிகிறது. இது கடந்த வருடத்தின் இறக்குமதியான 2.6 மில்லியன் டன்னை விட சற்று அதிகமாகும். இந்திய பயறுவகை மற்றும் தானிய சங்கத்தின் படி இந்நிதியாண்டின் இறக்குமதி 3 மில்லியன் டன்னைத் தாண்டி விடும். உற்பத்தியில் உள்ள 3-4 மில்லியன் குறைவை நிவர்த்தி செய்ய இந்தியா இறக்குமதியைத்தான் நம்பியுள்ளது.

இந்நிலையில் விவசாயிகள் 2013 ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் உளுந்து மற்றும் பாசிப்பயறின் விலை என்னவாக இருக்கும் என அறிய ஆவலாக உள்ளனர். விவசாயிகளுக்கு உதவும் வண்ணம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது, விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் விலைகளை ஆராய்ந்தது. விலை ஆய்வு முடிவு மற்றும் சந்தை ஆய்வு முடிவின் அடிப்படையில் 2013 ஏப்ரல், மே மாதங்களில் கிலோ ஒன்றிற்கு உளுந்தின் விலை 38-40 ரூபாயாகவும் பாசிப் பயறின் விலை 48-50 ரூபாயாகவும் இருக்க வாய்ப்புள்ளது. இம்மாதங்களில் விலை சீராக இருக்கும். அடுத்த இரண்டு மாதங்களுக்கு விலை ஏற வாய்ப்புகள் குறைவு. ஆகவே விவசாயிகள் உளுந்து மற்றும் பாசிப்பயறு ஆகியவற்றை அறுவடை செய்தவுடன் விற்பனை செய்யும்படி பரிந்துரைக்கப் படுகின்றனர்.

**மேலும் விற்பனை விவரங்களுக்கு தொடர்பு கொள்ள :-**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003
தொலைபேசி :0422 -2431405

**மேலும் தொழில்நுட்ப விவரங்களுக்கு தெடர்பு கொள்ளவும்**

பேராசரியர் மற்றும் தலைவர்

பயறுவகைத் துறை,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,

கோயம்புத்தூர் – 641 003

தொலைபேசி : 0422-2450498

மக்கள் தொடர்பு அலுவலர்